16th March 1959]

Sri S. M. ANNAMALAI : ஒவ்வொரு விவசாயிக்கும் இரண்டு எக்கர் நிலமும் 50 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இந்த 50 ரூபாயை அதிகரிக்க பரிசீலனை செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது அவர்களுக்கு கொடுக்கப்படும் காம்பன்சேஷனுக்கு மேலே கொடுக்கப்படுகிறது.

Sri M. JAGANNATHAN : Arising out of the reply given by the Hon. Minister that the lands given to these affected ryots are rainfed lands, may I know whether the Government will consider the desirability of giving some subsidy to those affected ryots so that they may sink wells for irrigation purposes?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, the normal facilities which are open to an agriculturist will be open to those persons also. But hon. Members would realise that all these other amenities are given over and above the compensation which has been given to them for acquisition of lands. The law presumes and we also always presume that once compensation is paid, the concerned persons should be reasonably satisfied with the money they got for the lands which they have parted with?

Factories employing more than 20 workers

* 831-I *Q.*—**Sri S. LAZAR** (on behalf of **Sri P. G. MANICKAM**) : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பிரதி தினமும் 20 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளையும் தொழிற்சட்டத்திற்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்கள் என்ற பதம் இவ்வேலையாட்களுக்கும் பொருந்தச் செய்ய வேண்டும் என்றும், சென்னை ஹைக்கோர்ட்டு நீதிபதிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளவை கவர்ன்மென்டாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டனவா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of taking suitable legislative action in the light of the judgment referred to is under consideration.

Sri S. M. ANNAMALAI : இந்தத் தீர்ப்புகளால் சுருட்டுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : பீடித் தொழிலாளர்களுக்குப் புதிதாக சட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : இருபது கைத்தறியாளர்களுக்கு மேல் வேலை செய்யும் நெசவுத் தொழிலுக்கு இந்தச் சட்டப்படி சலுகைகள் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் கொடுக்க வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : பாக்டரி சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது. பாக்டரி ஆக்டின் டெபெனிஷனை மாற்றிக்கொண்டால் எந்த விதமான தொழியும் பாக்டரி சட்டத்தின் கீழ்கொண்டுவர முடியும்.